டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 18.03.2026 புதன்கிழமை | பக்கங்கள் 22 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 222 - Madurai | Online Edition

# 22ம் தேதி வரை லேசான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மார்ச் 17

தமிழகத்தில் வரும் 22-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வடக்கு இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளிலிருந்து குமரிக்கடல் பகுதிகள் வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வட கடலோர தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக 18-ம் தேதி (இன்று) டெல்டா மாவட்டங்கள் மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், 19-ம் தேதி டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

20-ம் தேதி கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 21-ம் தேதி தென் தமிழகம் மற்றும் வடக்கு கடலோர தமிழகத்திலும் ஓரிரு இடங்களிலும், 22-ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரியில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 3 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேன் மிட்டாய் நிறுவனத்திற்கு கல்விச் சுற்றுலா சென்ற வேளாண் கல்லூரி மாணவர்கள்




திருச்சி, மார்ச் 17

திருச்சி மாவட்டம், மணச்சநல்லூரில் அமைந்துள்ள வீரா தேன் மிட்டாய் நிறுவனத்திற்கு தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை அறிவியல் பள்ளி மாணவர்கள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர்.

இச்சுற்றுலாவின் நோக்கம் சிறுதொழில் வளர்ச்சி, மதிப்புக் கூட்டு உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் தொழில் முனைவுத் திறன்களை அறிதல் ஆகும்.

நிறுவனத்தில் தேன் மிட்டாய் தயாரிப்புடன் சேர்த்து பாதுா மற்றும் பேரிச்சம் பழ மிட்டாய் போன்ற இனிப்பு உணவுப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. தயாரிப்பு முறைகள், சுகா தாரமான செயல்முறைகள் மற்றும் பொதியிடும் தொழில் நுட்பங்கள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப் பட்டது.

இந்நிறுவனத்தில் 6 பெண் தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்டிற்கு சுமார் ரூ,7 லட்சம் லாபம் ஈட்டும் இந்த நிறுவனம், கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி சிறுதொழில் முன்னேற்றத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

இந்த தொழில் பார்வை மூலம் மாணவர்கள் வேளாண்மை சார்ந்த மதிப்புக் கூட்டு பொருட்கள் மற்றும் உணவு பதப்படுத்தல் தொழில் வாய்ப்புகள் குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பூச்சி மருந்து, விதை விற்பனை உரிமங்களுக்கான பட்டயபடிப்பின் பயிற்சி வகுப்புகள்




பெரம்பலூர், மார்ச் 17

இந்திய வேளான்மை ஆராய்ச்சி கழகம், வேளாண்மை அறிவியல் மையம், பெரம்பலூர், மேனேஜ் ஹைதெராபாத் மற்றும் சமிதி குடுமியான்மலை இணைத்து நடத்தும் பூச்சி மருந்து விற்பனை உரிமம் விதை விற்பனை உரிமம்களுக்கான பட்டயபடிப்பின் பயிற்சி வகுப்புகள், பெரம்பலூரில் நடைப்பெற்றது. இதில் அக்ரி டாக்டர் த.ராதா கிருஷ்ணன், வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) வருகை புரிந்து மாணவர்களுக்கு பயனுள்ள பல தகவல்கள் மற்றும் பட்டயபடிப்புக்கு தேவையான அறிவுரைகளை வழங்கினார். முனைவர் வை.பொன்விழி ரம்யா, ஒருங்கிணைப்பாளர், மண்புழு உரம் தயாரிப்பு பற்றிய தகவல்களை வகுப்பில் வழங்கினார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்–ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தேனி மாவட்ட விவசாயிகளுக்கான விதை வாசனைப் பயிர்களில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி



தேனி, மார்ச் 17

வாசனை மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி & ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், பெரியகுளம் மற்றும் பாக்கு & வாசனைப் பயிர்கள் மேப்பாட்டு இயக்ககம், இந்திய அரசு, கோழிச்கோடு, கேரளா இணைந்து தேனி மாவட்ட விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் விதை வாசனைப் பயிர்களில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி நடைபெற்றது.

தோட்டக்கலை கல்லூரி & ஆராய்ச்தி நிலையம், பெரிய குளத்தில் நடைபெற்ற கருத்தரங்கை, பயிற்சியை முனைவர் சே.சரஸ்வதி தலைமை வகித்து துவக்கி வைத்தார்.

இந்தியாவில் 1.9 மில்லியன் எக்டர் பரப்பளவில் விதை வாசனைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. உற்பத்தி 2.0 மில்லியன் டன் ஆகும். தமிழ்நாட்டில் விதை வாசனை பயிர் சாகுபடி செய்வதன் முக்கியத்துவம் பற்றிப் விரிவாக கூறினார்.

தமிழ்நாட்டில் விதை வாசனைப் பயிர்கள் தேனி, இராம நாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல் & ஈரோடு போன்ற மாவட்டங்களில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது என்று கூறினார். அ.ஜாஸ்மின், தோட்டக்கலை உதவி இயக்குநர், பெரியகுளம், பயிற்சியில் துவக்க உரை ஆற்றினார்கள், நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மகசூலை பெருக்குவதன் மூலம் அதிக வருவாய் பெற முடியும் என கூறினார்.

கொத்தமல்லி, சீரகம், பெருஞ்சீரகம், வெந்தயம், ஓமம் போன்றவை இந்தியாவின் வருவாயை கூட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

முனைவர் த.பிரபு, இணை பேராசிரியர் & தலைவர்,வாசனை மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் துறை, தோட்டக்கலை கல்லூரி & ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம், ஆராய்ச்சி திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி அனைவரையும் வரவேற்று பேசினார். மேலும் இந்த ஒரு நாள் தேனி மாவட்ட விவசாயி களுக்கான பயிறசியை ஒருங்கிணைத்து நடத்தினார்.

முனைவர் எஸ்.முத்துலட்சுமி, முனைவர் கே.ஆர். இராஜதுரை, முனைவர் கே.கல்பனா போன்ற பல்வேறு துறைகளின் பேராசிரியர் தலைவர்கள் பயிற்சி சிறப்புற நடைபெற வாழ்த்துரை வழங்கினார்கள்.

தொழில்நுட்ப உரையில் முனைவர் த.பிரபு, கொத்தமல்லி & வெந்தயம் உயர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும், முனைவர் ஜி.சதீஸ், சீரகம், பெருஞ்சீரகம் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்தும், முனைவர் சா.செண்பகவள்ளி, வாசனைப் பயிர்களின் கழிவுகளை பயன்படுத்தி மண் வளத்தை கூட்டுவது பற்றியும், முனைவர் கே.கல்பனா, விதை வாசனைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை குறித்தும், எஸ்.செந்தில்குமார், உதவி இயக்குநர், வாசனைப் பயிர்கள் வாரியம், இந்திய அரசு, போடி, அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள், மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்தும் விரிவாக கருத்துகளை விவசாய பெருமக்களுக்கு வழங்கினார்கள்.

தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 108 விவசாய பெருமக்கள் பங்கு பெற்று பயன் அடைந்தனர். அனைத்து விவசாய பெருமக்களுக்கும் விதை வாசனை சாகுபடி குறித்த மடிப்புபிதழ்கள் வழங்கப்பட்டன.

இறுதியில் முனைவர் த.பிரபு, இணை பேராசிரியர் & தலைவர், வாசனை & மலை தோட்டப் பயிர்கள் துறை நன்றி உரை வழங்கினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# தென்னை வேர் ஊட்டம் பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்




திருச்சி, மார்ச் 17

அன்பில் கிராமத்தில் விவசாயிகளுக்கு தென்னை வேர் ஊட்டம் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

இதில் விவாசயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவிகள் அளித்தனர்.

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம் அன்பில் கிராமத்தில் தென்னை வேர் ஊட்டம் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி நடைபெற்றது. திருச்சி தனலட்சுமி ஸ்ரீனிவாசன் பல்கலைக்கழகம் சமயபுரம், வேளாண் இறுதி ஆண்டு மாணவிகள் செய்முறை விளக்கத்தை விவசாயிகளுக்கு தெரிவித்தனர்.

**தென்னை வேர் ஊட்டத்திற்கு தேவையான பொருட்கள்**

- 2 கிராம் – ஆரியோஃபங்கின்
- 1 கிராம் – காப்பர் சல்பேட்
- 100 மி.லி – தண்ணீர் என்று கூறினர்.

தென்னையில் உள்ள கரும்புள்ளி பூச்சியைக் கட்டுப்படுத்த வேர் ஊட்டுதல் புதிய மற்றும் உயிருள்ள வேரைத் தேர்ந் தெடுத்து, ஒரு கோணத்தில் கூர்மையாக வெட்டி 7 X 10 செ.மி அளவுள்ள பாலித்தின் பையில் 10 மி.லி தண்ணீர் உள்ள பூச்சிக் கொல்லிக் கரைசலில் வேரைச் செருகவும். பருத்தி நூல் மூலம் பையை வேருடன் இறுக்கமாக பாதுகாக்கவும் என்று விவசாயிகளுக்கு கல்லூரி மாணவிகள் செய்முறை விளக்கம் அளித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# மண்ணின் pH உங்கள் விளைச்சலின் ரகசியம்

"மண்ணை புரிந்தால், விளைச்சல் தானாக வரும்!". விவசாயத்தில் அதிக மகசூல் பெற வேண்டுமெனில், மண்ணின் தன்மையை அறிதல் மிக முக்கியம். அந்த வகையில், மண்ணின் pH (பி.எச்) என்பது மிக முக்கியமான ஒரு காரணியாகும்.




## மண்ணின் pH என்றால் என்ன?

pH என்பது மண்ணின் அமிலத்தன்மை அல்லது காரத்தன்மை அளவை குறிக்கும் ஒரு மதிப்பாகும். இது 0 முதல் 14 வரை இருக்கும்.

- pH 7 - நடுநிலை
- pH 7-க்கு குறைவு - அமில மண்
- pH 7-க்கு மேல் - கார மண்

## மண்ணின் pH ஏன் முக்கியம்?




pH அளவுகோல் வரைபடம்

மண்ணில் உள்ள சத்துக்கள் பயிர்களுக்கு கிடைப்பது pH-ஐப் பொறுத்தே அமையும். சரியான pH இருந்தால் சத்துக்கள் எளிதில் கிடைக்கும்; தவறான pH இருந்தால் சத்துக்கள் இருந்தாலும் பயிர்கள் எடுத்துக் கொள்ள முடியாது.

## அமில மண் (pH < 6.5)


இரும்பு (Fe), மாங்கனீஸ் (Mn), துத்தநாகம் (Zn), செம்பு (Cu) போன்ற நுண்ணூட்டச்சத்துக்கள் அதிகமாக கரையக்கூடியதால் எளிதில் கிடைக்கும். ஆனால் பாஸ்பரஸ் (P), கால்சியம் (Ca), மக்னீசியம் (Mg) குறைவாக கிடைக்கும்.

## நடுத்தர மண் (pH 6.5—7.5)

பெரும்பாலான சத்துக்கள் (N, P, K மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள்) சிறந்த முறையில் கிடைக்கும். இது பயிர் வளர்ச்சிக்கு உகந்த pHஆகும்.

## கார மண் (pH > 7.5)

இரும்பு, துத்தநாகம், மாங்கனீஸ் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் கிடைப்பது குறையும். பாஸ்பரஸ் நிலையாகி (fixation) தாவரங்களுக்கு கிடைக்காது.




**எந்த pH–ல் எந்த பயிர்?**

- pH 6.5 - 7.5 → பெரும்பாலான பயிர்களுக்கு சிறந்தது
- அமில மண் - தேயிலை, உருளைக்கிழங்கு
- கார மண் - பருத்தி, சோளம்

**மண்ணின் pH எப்படி அறியலாம்?**

மண் பரிசோதனை மையத்தில் பரிசோதனை செய்யலாம் அல்லது pH மீட்டர் பயன்படுத்தலாம்.

**pH சரிசெய்வது எப்படி?**

அமில மண் - சுண்ணாம்பு சேர்க்க வேண்டும்.

கார மண் - ஜிப்சம் மற்றும் ஆர்கானிக் உரங்கள் சேர்க்க வேண்டும்.

**முடிவு**

மண்ணின் pH என்பது அதிக மகசூலின் ரகசியம். சரியான pH இருந்தால் விளைச்சல் அதிகரிக்கும்.

தகவல் : *Glory.K.S., Assistant Professor (SS & AC), Krishna College of Agriculture and Technology, Usilampatti, Madurai District.*

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மண்வளத்தை மேம்படுத்த பல தானிய விதைப்பு



பல தானிய விதைப்பு என்பது ஒரே நிலத்தில் பல தானியங்கள் பயறு விதை, எண்ணெய் வித்து விதை போன்றவற்றை ஒன்றாக விதைத்து அவை பூக்கும் பருவத்தில் அதனை மடக்கி ரோட்டேவோட்டர் மூலமாக உழுவதன் மூலமாக மண்ணின் வளமும் பெருகுவதுடன் மட்டுமல்ல, பூச்சிக்கொல்லி இரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண்ணில் உள்ள நச்சுத்தன்மை குறைவதோடு மண்ணின் கரிம சத்து அளவு ( ORGANIC CARBON) அதிகரிக்க இந்த பல தானிய விதைப்பு உதவுகிறது.

**எப்போது பல தானிய விதைப்பை மேற்கொள்ளலாம்?**

கோடையின் இறுதியில் (மே, ஜூன்) மாதங்களில், அடுத்த பயிருக்கு முந்தைய காலத்தில் இறவையாகவோ மழை பெய்கின்ற நேரத்தில் மானாவாரியாக விதைக்கலாம். இயற்கை விவசாயத்தை தொடங்குவதற்கு முன்னதாக பல தானிய விதைப்பை மேற்கொள்ள அங்கக வேளாண்மையின் சிறந்த தொழில்நுட்பமாக கருதப்படுகின்றன.

**பல தானிய விதைப்பில் என்னென்ன விதைகள், விதைக்கலாம்.? தெரியுமா?**

கீழ்க்கண்ட விதைகளை குறிப்பிட்ட அளவு பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமில்லை. அவரவர் மண்ணின் தன்மைகேற்பவும் கிடைக்க கூடிய விதைகளின் அளவை பொறுத்து கூட்டவோ, குறைக்கவோ நீங்களே முடிவு செய்யலாம்.

**தானிய பயிர்கள்**

சோளம் = ஒரு கிலோ
கம்பு = அரை கிலோ
தினை, சாமை தலா = 250 கிராம்

**பயிறு வகைப் பயிர்கள்**

பாசி பயறு, தட்டைப் பயறு, கொண்டைக்கடலை ஆகியவை தலா ஒரு கிலோ.

**எண்ணெய் வித்து பயிர்கள்**

நிலக்கடலை, சூரிய காந்தி, ஆமணக்கு தலா = 2 கிலோ

எள் = 500 கிராம்.

**பசுந்தாள் பயிர்கள் விதைகள்**

தக்கை பூண்டு, சணப்பு தலா 2 கிலோ

**விதைப்பு**

இந்த அளவு அனைத்து விதைகளை ஒரே நிலத்தில் விதைக்க வேண்டும். விதைகள் வளர்ந்து 45-50 நாட்களில் பூக்கும் தறுவாயில் அவற்றை வேரோடு மடக்கி நன்றாக உழவு செய்ய வேண்டும். அவை மண்ணில் பட்டு மழை வெயில் காரணமாக மக்கி மண்வளத்தையும் நுண்ணுயிர் பெருக்கத் திற்கும் உதவுகின்றன. ஊட்டசத்துகள் சமசீராக கிடைக்கிறது. அத்துடன் மண்ணின் கார அமில நிலையை சரிசெய்வதுடன் மண்ணின் நீர்பிடிப்பு திறனையும் அதிகரிக்க செய்கிறது. இதற்குபின் மாட்டுச்சாணம், ஆட்டுகிடை போன்றவற்றை இடலாம். கண்ட கண்ட இரசாயன உரங்களை போட்டு மலடான மண்ணை மீட்டு எடுக்க பல தானிய விதைப்பு மேற்கொள்ளலாம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# மண் அடுக்குகளின் நன்மைகள் பற்றி எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 17

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் விவசாயி களிடம் மண் அடுக்குகள் பற்றி கூறினர்.

மண் அடுக்குகள் (Soil Profile) என்பது நிலத்தின் மேற்பரப்பிலிருந்து ஆழமான பாறை வரை உள்ள மண்ணின் அடுக்குகளைக் குறிக்கும். இது பொதுவாக O, A, B, C மற்றும் R என ஐந்து முக்கிய அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் தாவர வளர்ச்சிக்குத் தேவையான மட்கு (Humus) நிறைந்த மேல் மண் மற்றும் கீழ் மண் அடுக்குகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது குறித்து கூறினர்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# மண் மேலாண்மை

# நிலத்தின் உயிர் காக்கும் நுட்பங்கள்

## அறிமுகம்

விவசாயத்தின் அடிப்படை ஆதாரம் மண் ஆகும். நல்ல மண் இருந்தாலே நல்ல விளைச்சல் கிடைக்கும். ஆனால் இன்றைய சூழலில் மண் வளம் குறைவது விவசாயிகளுக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. அதிக வேதிப்பொருள் பயன்பாடு, தண்ணீர் தட்டுப்பாடு, மண் அரிப்பு போன்ற காரணங்களால் மண் தரம் குறைகிறது. எனவே, மண் மேலாண்மை முறைகளை சரியாக பின்பற்றுவது அவசியமாகிறது.

## மண் மேலாண்மை என்றால் என்ன?

மண்ணின் வளத்தை பாதுகாத்து, பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை சமநிலையாக வழங்கும் முறையே மண் மேலாண்மை ஆகும்.

இது மண்ணின் இயற்கை அமைப்பை காக்கவும், நீண்டகால விளைச்சலை அதிகரிக்கவும் உதவுகிறது.

## மண் வளத்தை பாதிக்கும் முக்கிய காரணங்கள்

1. அதிக வேதிப்பொருள் பயன்பாடு அதிக அளவில் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்படுத்துவதால் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் அழிகின்றன.

2. மண் அரிப்பு (Soil Erosion) மழை மற்றும் காற்றால் மேற்பரப்பு மண் கழன்று போவது.

3. ஒரே பயிர் தொடர்ச்சியாக சாகுபடி ஒரே பயிரை தொடர்ந்து வளர்ப்பதால் குறிப்பிட்ட ஊட்டச்சத்துகள் மட்டுமே குறை கின்றன.

4. தண்ணீர் மேலாண்மை குறைபாடு அதிக நீர் அல்லது குறைவான நீர் இரண்டும் மண் தரத்தை பாதிக்கும்.

## மண் மேலாண்மையின் முக்கியத்துவம்

- மண்ணின் இயற்கை வளம் அதிகரிக்கும்
- பயிர்களின் வளர்ச்சி மேம்படும்

● செலவு குறைந்து லாபம் அதிகரிக்கும்

● நீண்டகால நிலைத்தன்மை கிடைக்கும்

**சிறந்த மண் மேலாண்மை முறைகள்**

**1. பசுமை உரம் (Green Manuring)**

சுண்ணாம்பு பச்சை, தட்டைப் பயறு போன்றவற்றை வளர்த்து மண்ணில் புதைப்பது. இது மண்ணில் நைட்ரஜன் அளவை அதிகரிக்கும்.

**2. பயிர் சுழற்சி (Crop Rotation)**

ஒரே நிலத்தில் பல்வேறு பயிர்களை மாறி மாறி வளர்ப்பது.

**உதாரணம் :** நெல் – பருப்பு – எண்ணெய் விதைகள்

**3. இயற்கை உரம் பயன்படுத்துதல்**

கோழி உரம், மாட்டு சாணம், கம்போஸ்ட் போன்றவை மண்ணின் உயிர்ச்சத்தத்தை உயர்த்தும்.

**4. மண் பரிசோதனை (Soil Testing)**

மண்ணின் pH, நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் அளவை அறிந்து உரம் பயன்படுத்துதல்.

**5. பயிர் மூடாப்பு (Mulching)**

பயிர் சுற்றி வைக்கப்படும் உலர் இலைகள் அல்லது புல்

● நீர் ஆவியாகாமல் காக்கும்

● கொடிகள் வளர்வதை தடுக்கும்

**6. நீர் மேலாண்மை**

● துளி பாசனம் (Drip Irrigation)

● மழைநீர் சேகரிப்பு

● நீர் சேமிப்பு மற்றும் மண் ஈரப்பதம் பராமரிப்பு

**மண் அரிப்பை கட்டுப்படுத்தும் முறைகள்**

● மேடு நிலங்களில் மரங்கள் நடுதல்

● புல் மூடி வளர்ப்பு

● காற்றுத்தடுப்பு மரங்கள்

**நுண்ணுயிர் உரங்களின் பங்கு**

**அசோஸ்பிரில்லம், ரைசோபியம் போன்ற நுண்ணுயிர்கள்**

● மண்ணில் நைட்ரஜன் நிலை உயர்த்தும்

● வேர் வளர்ச்சியை மேம்படுத்தும்

**மண் ஆரோக்கியத்தை பராமரிக்கும் வழிமுறைகள்**

● அதிக உழவு தவிர்க்கவும்

● மண் ஈரப்பதம் சரியாக பராமரிக்கவும்

● மண் மூடி பயிர்கள் (Cover Crops) வளர்க்கவும்

● கரிமப் பொருட்கள் சேர்க்கவும்

**விவசாயிகளுக்கான நடைமுறை ஆலோசனைகள்**

● வருடத்திற்கு ஒரு முறை மண் பரிசோதனை செய்யுங்கள்

● இயற்கை மற்றும் வேதிப்பொருள் உரங்களை சமநிலையாக பயன் படுத்துங்கள்

● நீர் சேமிப்பு முறைகளை கடைபிடிக்கவும்

● ஒரே பயிரை தொடர்ந்து சாகுபடி செய்ய வேண்டாம்

● மண் வளத்தை பாதுகாக்க மரங்கள் வளர்க்கவும்

**முடிவுரை**

மண் என்பது ஒரு உயிருள்ள வளமாகும். அதை பாதுகாப்பது நமது கடமை.சரியான மண் மேலாண்மை முறைகளை பின்பற்றினால், விளைச்சல் அதிகரித்து விவசாயிகள் நல்ல வருமானம் பெறலாம். இயற்கை வளங்களை பாதுகாக்கும் வழியில் மண் மேலாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது.



கட்டுரையாளர் : ***விக்னேஷ்.தே, உதவி பேராசிரியர், மண் அறிவியல் மற்றும் வேளாண்மை வேதியியல், நாளாந்த வேளாண்மை கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : harishvignesh143@ gmail.com.***

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# ரம்ஜான் பண்டிகையையொட்டி ரூ.3.5 கோடிக்கு ஆடு விற்பனை

மதுரை, மார்ச் 17

ரம்ஜான் பண்டிகையையொட்டி மதுரை மாவட்டம், வாடிப்பட்டி, திருப்புவனம் வாரச்சந்தையில் ரூ.3.5 கோடிக்கு ஆடு விற்பனையாயின. உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் போட்டி போட்டு ஆடுகளை வாங்கிச் சென்றனர்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் வாரந்தோறும் செவ்வாய்க் கிழமை கால்நடை சந்தை நடைபெறும். காலையில் ஆடு, கோழி விற்பனை செய்யப்படும். அதன்பின் காய்கறி சந்தை நடைபெறும். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகளும், அண்டை மாநிலமான கேரளாவில் இருந்து வரும் வியாபாரிகளும் ஆடு, கோழிகளை வாங்கிச் செல்வர்.

வரும் 21ம் தேதி ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், நேற்று முன்தினம் காலை கூடிய சந்தை களை கட்டியது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் தாங்கள் வளர்த்த வெள்ளாடு, செம்மறி ஆடுகள், மாடுகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் குவிந்தனர். குறிப்பாக ஆடு விற்பனை அமோகமாக இருந்தது. 10 கிலோ ஆடு ரூ.9 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை விற்பனையானது. வியாபாரிகள் போட்டி போட்டு ஆடுகளை வாங்கிச் சென்றனர். இதேபோல கோழி விற்பனையும் நடைபெற்றது.

இது குறித்து சந்தை வியாபாரிகள் கூறுகையில், ‘வாடிப்பட்டி வாரச்சந்தையில் வழக்கமாக ரூ.50 லட்சம் முதல் ரூ.80 லட்சம் வரை விற்பனை இருக்கும்.



வரும் 21ம் தேதி ரம்ஜான் பண்டிகை என்பதால் தற்போது ஆடு மற்றும் கோழி விற்பனை அதிகளவில் இருந்தது. ஆடுகள் மட்டும் ரூ.2 கோடிக்கு விற்பனையாகியது' என்றனர்.

அதே போல், சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் நடைபெறும் சந்தையும் மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு ஆடு, மாடு, கோழி ஆகியவை விற்பனை செய்யப்படும். சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தாங்கள் வளர்க்கும் ஆடு, கோழி, மாடுகளை இச்சந்தைக்கு கொண்டு வருவர். உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்வர். இந்நிலையில், ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு சந்தை காலையிலேயே களைகட்டியது. ஆடுகள் எடைக்கு தக்க விற்பனையாயின. 5 கிலோ வான்கோழி ரூ.7500 வரையும், நாட்டுக்கோழி, சேவல் ரூ.1000 முதல் ரூ.1500 வரையும் விற்பனையாயின. 10 கிலோ ஆடு ரூ.10 ஆயிரம் வரை விற்பனையாயின. சுமார் ரூ.1.5 கோடிக்கு ஆடு, கோழி விற்பனையானதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து வியாபாரி ஒருவர் தெரிவிக்கையில், 'தேர்தல் கமிசன் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு வந்தால் பறிமுதல் செய்வதால், அதிகளவில் வியாபாரிகள் வரவில்லை. 5000 ஆடுகள் விற்பனையாகும் என நினைத்த நிலையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் மட்டுமே விற்பனையாயின. கடந்தாண்டு ரம்ஜான் விற்பனை போல இல்லை' என்றார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**